04175 - 236654 / 235295
SHANMUGA INDUSTRIES
ARTS & SCIENCE COLLEGE (Co-Ed)
Accredited with "B+" GRADE by NAAC in Cycle 1
Certified Under Section 2 (f) & 12 B of UGC Act 1956, An ISO 9001 - 2015 Certified Institution
Permanently Affiliated to Thiruvalluvar University, Vellore and Approved by the Govt. of Tamil nadu & AICTE, New Delhi
Manalurpet Road, Tiruvannamalai - 606 603, shanmugacollege@gmail.com www.shanmugacollege.edu.in

02.05.2023

# சண்முகா கல்லூரியின் 26 ஆம் ஆண்டு ஆண்டு விழா

திருவண்ணாமலை சண்முகா தொழிற்சாலை கலை அறிவியல் கல்லூரியின் 26 ஆம் ஆண்டிற்கான ஆண்டு விழா நடைபெற்றது. இவ்விழாவில் கல்லூரியின் தலைவர் **எம்.என்.பழனி** தலைமை வகித்தார். செயலர் மற்றும் தாளாளர் **எல்.விஜய் ஆனந்த்** முன்னிலை வகித்தார். முன்னதாக, கல்விப்புல முதன்மையர் பேரா.**அழ.உடையப்பன்** வரவேற்புரையாற்றினார். ஆண்டறிக்கையினைக் கல்லூரியின் முதல்வர் முனைவர் **கே.ஆனந்தராஜ்** வாசித்தார். விழாவில் அறக்கட்டளை உறுப்பினர்கள் **சீனி.கார்த்திகேயன், பி.இராமச்சந்திர உபாத்தியாயா, எஸ்.என்.சௌந்தர்ராஜன், என்.குமார், டி.ஏ.எஸ்.முத்து, எம்.சீனுவாசன், எஸ்.டி.ஆர்.எஸ்.பாபு, கோ.இராஜேந்திரகுமார், ஏ.சாந்தகுமார், பி.என்.கே.இராஜேந்திரன், எம்.சி.இரவிக்குமார், பா.செந்தில்குமார், ஏ.அருணாசலம்** உள்ளிட்டோர் வாழ்த்துரை வழங்கினர். துணை முதல்வர் முனைவர் **கோ.அண்ணாமலை** சிறப்பு விருந்தினரை அறிமுகம் செய்தார். நிறைவாக பொருளாளர் **ஏ.ஸ்ரீதர்** நன்றியுரை வழங்கினார். நிகழ்ச்சியினைத் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் **இரா.சங்கர்** தொகுத்து வழங்கினார்.

விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட எழுத்தாளர் வழக்கறிஞர் திருமதி **க.சுமதி** அவர்கள் விழாப்பேருரையில், மாணவர்கள் கல்வி பயில்வதோடு பலதரப்பட்ட திறமைகளை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்றும், நமது இராணுவ வீரர்களின் வீர தீர செயல்களைக் கூறி மாணவர்களிடம் நாட்டுப்பற்றுடனும், எழுச்சியுடனும் திகழ வேண்டும் என்றும், **வினை ஆடவருக்கு மட்டுமல்ல பெண்களுக்குமுரியது,** ஆண் பெண் பேதமில்லாமல் நட்புணர்வோடும், புரிதலோடும் பயின்று வாழ்வில் பல சாதனைகளை நிகழ்த்த வேண்டுமென எடுத்துரைத்தார். மேலும், பல்வேறு போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவ, மாணவியருக்குப் பரிசுகள் வழங்கிச் சிறப்பித்தார்.

பின்னர் நிகழ்ச்சியில் மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இந்நிகழ்ச்சியில் அறக்கட்டளை உறுப்பினர்கள், விருந்தினர்கள், பெற்றோர்கள், பத்திரிக்கை நண்பர்கள், துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள், அலுவலகப் பணியாளர்கள், மாணவ, மாணவியர் உள்ளிட்ட அனைவரும் கலந்து கொண்டனர்.

செயலர் மற்றும் தாளாளர்



சண்முகா தொழிற்சாலை கலை அறிவியல் கல்லூரி
SHANMUGA INDUSTRIES ARTS AND SCIENCE COLLEGE
Accredited With "B+" Grade by NAAC
Certified Under Section 2(f) & 12B of the UGC Act 1956, An ISO 9001 : 2015 Certified Institution, Permanently Affiliated to Thiruvalluvar University, Vellore
Approved by the Govt. of Tamilnadu & AICTE, Manalurpet Road, Tiruvannamalai - 606 603, E-Mail : shanmugacollege@gmail.com, Facebook : www.facebook.com/shanmugacollege
NAAC
SHAN Fest 2023
Mrs.K.SUMATHI
Advocate, High Court, Chennai.
Mr.V.NALLUSAMY ANNAVI
International Athlete,
Indian Railways Coach and National Coach,
ANNUAL DAY & SPORTS DAY
T.M.B.S.S.